# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 25, 2023

Weekly E-paper ● March 25, 2023




# வஞ்சகப் பாதையில் ஒன்றியம்!
# வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு!

**பேராசிரியர் மு.நாகநாதன்,**
(முன்னாள் துணைத் தலைவர், மாநிலத் திட்டக் குழு)

## இனி வேறு வழியில்லை...!

தலையங்கம்

## ஆபத்தில் கூட்டாட்சி

நூல் அறிமுகம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மார்ச் 25, 2023 Weekly E-paper ● March 25, 2023


# வஞ்சகப் பாதையில் ஒன்றியம்! வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு!


**பேராசிரியர் மு.நாகநாதன்,**

(முன்னாள் துணைத் தலைவர், மாநிலத் திட்டக் குழு)




இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறது. பல்வேறு புள்ளி விவரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. அதிக வருமானம் உடைய பிரிவினர் கடந்த 8 ஆண்டுகளில் 6 இலட்சம் பேர் இந்தியாவைவிட்டு வெளியேறி விட்டனர். வெளியேறிவிட்டார்கள் என்றால் இங்கே முதலீடு செய்த பணத்தை, பல இலட்சம் கோடிகளைக் கொண்டு சென்றுவிட்டார்கள். இந்தியாவின் ஏற்றுமதி குறைந்து கொண்டு வருகிறது. இறக்குமதியும் குறைந்து கொண்டே வருகிறது. பொருளாதார உற்பத்தி முறையில் தனியார் புகுந்து தனியார் இலாபம் பெறுவதற்காகத்தான் ஒன்றிய அரசு நேரடியாகவோ மறைமுகமாகவோ வேலை செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாடு போன்ற வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் இருந்து வருமான வரியை, கார்ப்பரேட் வரியை, சரக்கு சேவை வரியை எடுத்துக்கொண்டு செல்கிறார்கள். சரக்கு சேவை வரிக்கான நிலுவைத் தொகையை இன்னும் கொடுக்கவில்லை. நிதிக் குழு வழியாக நமக்கு வர வேண்டிய தொகை பற்றி மார்ச் 16ஆம் தேதி இந்து பத்திரிக்கையில் புள்ளிவிவரப் பகுதியில் ஒரு கருத்து வந்தது. தமிழ்நாடு வரிவழியாக ஒரு ரூபாய் ஒன்றிய அரசுக்குக் கொடுக்கிறது என்றால் திரும்பப் பெறுவது 29 காசுதான் என்று அந்தப் புள்ளி விவரம் சொல்கிறது. ஆனால் உத்தரப்பிரதேசம் ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு ரூ.2.73 வாங்குகிறது. பீகார் ஒரு ரூபாய் கொடுத்துவிட்டு 7ரூபாய் வாங்குகிறது.

வேளாண்துறையில், தொழில் துறையில், சிறு குறு தொழில் துறையில் நாம் பொருளாதார உற்பத்தியைப் பெருக்குகிறோம். அதனால் வருமானம் பெருகுகிறது. அந்த வருமானத்தை வரி வழியாக ஒன்றிய அரசு எடுத்துச் செல்கிறது. சராசரியாக ஒரு ரூபாயில் 29 காசுகளைத்தான் திரும்பக் கொடுக்கிறார்கள் என்றால், 71 காசுகளைச் சுரண்டிக் கொள்கிறார்கள். இவ்வளவு நிதி நெருக்கடியை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கிறது.

இருப்பினும் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கிறது. தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறைக்கு 47,226 கோடி ஒதுக்கி இருக்கிறோம். இதன் மூலம் இன்னும் உயர்கல்வியில் முன்னேறி அதிக வேலை வாய்ப்புகளைப் பெற்று குடும்ப வருமானத்தை அதிகரிக்க முடியும். அடுத்து நகர்ப்புற மேம்பாட்டிற்காக 38, 444 கோடி ஒதுக்கி இருக்கிறோம்.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

1ஆம் பக்க தொடர்ச்சி ...

ஏனெனில் இந்திய மாநிலங்களிலேயே அதிக நகர்ப்புற வளர்ச்சி அடைந்த மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் இருக்கிறது. 49 விழுக்காடு மக்கள் ஊர்ப் புறங்களிலும் 51 விழுக்காடு மக்கள் நகர்ப்புறங்களிலும் வாழ்கிறார்கள்.



மு.நாகநாதன்

தமிழ்நாடு அரசு சிறப்பாக நேர்மையான முறையில் நிதிச் சிக்கனத்தைக் கையாண்டு வரி வருவாயைப் பெருக்கும் வகையில் நிதிநிலை அறிக்கையை உருவாக்கி இருக்கிறது. இதைவிடச் சிறந்த நிதிநிலை அறிக்கையை எப்படி உருவாக்க முடியும்? தமிழ்நாட்டிலிருந்து எடுத்துச் செல்லும் வரி வருவாயைக் கொடுக்க வேண்டும் என்றுதான் கேட்கிறோம். அதுகூட முழுமையாகக் கேட்கவில்லை. 75 விழுக்காடு கூடக் கேட்கவில்லை. 50 விழுக்காடுதான் கேட்கிறோம். மூன்றாவது, சுகாதாரத்திற்கு 18,661 கோடி ஒதுக்கி இருக்கிறோம். ஆசியாவிலேயே சிறந்த சுகாதாரத்துறை வசதிகளைக் கொண்டது தமிழ்நாடு. தனியார் துறை இருக்கிறது, பொதுத்துறை இருக்கிறது. எல்லா மாவட்டத்திற்கும் மருத்துவ மனைகளையும் மருத்துவக் கல்லூரிகளையும் வழங்கி இருக்கிறோம். ஒன்றிய அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதாகச் சொல்லி நான்கு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்னும் கட்டப்படாமல் காலி இடமாகவே உள்ளது. எது வளர்ச்சி, எது உண்மையான வளர்ச்சி, எது ஏமாற்றும் வெற்று முழக்கம் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஊரக வளர்ச்சிக்கு 22,562 கோடி, மாநில நெடுஞ்சாலைகளுக்கு 19465 கோடி, காவல் துறைக்கு 10,812 கோடி, எரிபொருளுக்கு 10,694 கோடி, நீர் மேலாண்மைக்கு 8232 கோடி, போக்குவரத்துக்கு 8056 கோடி, சமூக நலனுக்கு 7,745 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பெரியார் காலத்திலிருந்து நாம் முன் வைப்பது, நலிந்த பிரிவினருக்குக் கல்வி, வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும், நலிந்த பிரிவினருக்கு உணவு கொடுக்க வேண்டும், சத்துணவு கொடுக்க வேண்டும், நலிந்த பிரிவினரின் வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதுதான். இதுதான் திராவிட இயக்கத்தினுடைய, தந்தை பெரியார் வலியுறுத்திய, அண்ணா கடைபிடித்து கலைஞர் பின்பற்றி இன்றைக்கு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து வரும் கொள்கையாகும்.

நிதிநிலை அறிக்கையின் புள்ளி விவரப்படி ஒரு ரூபாயில் 44 காசு மாநிலத்தின் சொந்த வருவாயில் இருந்து கிடைக்கிறது. 33 காசு பொதுக்கடனிலிருந்து வருகிறது. மாநிலத்தின் சொந்த வரி இல்லாத வருவாய் 5 காசு. ஒரு ரூபாயில் கிட்டத்தட்ட 82 காசு, தமிழ்நாடு அரசே செலவு செய்கிறது. ஒன்றிய அரசின் பங்கு 17 காசுதான். 33 விழுக்காடு கடன் வாங்கி செலவு செய்கிறோம்.

மாநில அரசுக்குப் போதிய நிதி அதிகாரங்கள் இல்லை. நிதி அதிகாரங்கள் இல்லாதது மட்டுமன்று, இருக்கிற அதிகாரங்களும் குறைந்து கொண்டே வருகின்றன. 1977இல் ஏழாவது நிதிக் குழுவில் 7 விழுக்காடு மொத்த நிதி ஒதுக்கீட்டில் கொடுக்கப்பட்டது. இப்போது 4 விழுக்காடாகக் குறைந்துவிட்டது. பல இலட்சம் கோடிகளை 1977இல் இருந்து 2022 வரை இழந்து விட்டோம். கிடைக்க வேண்டிய நிதி ஒதுக்கீடு கிடைக்காத போதிலும் விவசாயத்தை தப் பாதுகாத்திருக்கிறோம், பள்ளிக் கல்வியை, உயர் கல்வியைப் பாதுகாத்திருக்கிறோம், பொது சுகாதாரத்தைப் பாதுகாத்திருக்கிறோம், நகர்ப்புற மேம்பாட்டினைப் பாதுகாத்திருக்கிறோம். சமூக நீதியின் அடிப்படைச் சிந்தனையான மானுட வளர்ச்சி அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்கிற வகையில் செயல்பட்டு வருகிறோம்.

ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், பழங்குடியினர் ஆகியோரையும் உயர்த்துவதுதான் மானுட மேம்பாடு. அதைத்தான் ஹியூமன் டெவலப்மெண்ட் இன்டெக்ஸ் என்று சொல்கிறார்கள். மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் தமிழ்நாடு மூன்று இடங்களுக்குள் இருப்பினும், ஒன்றிய அரசு தமிழ்நாட்டின் பணத்தை எடுத்துக்கொண்டு ஒரு ரூபாய்க்கு 29 காசு கொடுப்பது என்பது ஒரு வஞ்சனையான செயல், நீதியற்ற செயல். இதைத் தமிழ்நாடு போன்ற மாநிலங்களால் எவ்வளவு காலம் தாக்குப்பிடிக்க முடியும் என்று தெரியவில்லை.

தென் மாநிலங்களான கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. உத்திரப்பிரதேசமும் பிகாரும் மட்டும்தான் இந்தியாவா. அண்மையில் பிபிசி தமிழ் ஒரு புள்ளிவிவரத்தை வெளியிட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 33 இலட்சம் வட மாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அந்த 33 இலட்சம் பேருக்கும் நாம் வாழ்க்கை கொடுக்கிறோம். ஒரு ரூபாயில் 29 காசுகள் வாங்கிக் கொண்டு 33 லட்சம் வடமாநிலத் தொழிலாளர்களையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு.

இந்த நிதிநிலை அறிக்கை, இருக்கின்ற நிதி நெருக்கடிக்கிடையில், உலக அளவிலும் இந்திய அளவிலும் பொருளாதார வளர்ச்சி வீழ்ச்சி அடைந்து வருகிற போதிலும், தமிழ்நாடு தனித்து, வீழ்ச்சியைத் தடுத்து வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்வதாகும்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இனி வேறு வழியில்லை...!





நீதியரசர் சந்துரு தலைமையில் அமைக்கப்பட்ட குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், ‘தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்டம் தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டு ஒழுங்குபடுத்துதல் அவசரச் சட்ட மசோதா’ உருவாக்கப்பட்டு, அமைச்சரவை ஒப்புதலுக்குப் பின், கடந்த அக்டோபர் 1ஆம் தேதி ஆளுநர் ஆர். என்.ரவிக்கு அனுப்பப்பட்டு, அவரும் ஒப்புதல் அளித்துச் சட்டம் அமலானது.

இதையடுத்து, ஆன்லைன் சூதாட்டத் தடைக்கான அவசரச் சட்டத்துக்கு மாற்றாக, அக்டோபர் 19ஆம் தேதி ரம்மி தடைச் சட்ட மசோதாவை நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பியது தமிழ்நாடு அரசு.

அதற்கு ஆளுநர் விளக்கம் கேட்டு மசோதாவைத் திருப்பி அனுப்பினார். அடுத்த 24 மணி நேரத்தில் விளக்கங்களை தமிழக அரசு அளித்தது.

அதையும் ஏறத்தாழ நான்கு மாதங்களுக்கு மேலாகக் கிடப்பில் போட்டு வைத்த ஆளுநர் திடீரென்று, ரம்மி சூதாட்டத்தைத் தடை செய்ய தமிழ் நாட்டுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லி திரும்பவும் திருப்பி அனுப்பியுள்ளார்.

முதலில் அக்டோபர் 1ஆம் தேதி தமிழ்நாடு அரசு அனுப்பிய அவசரச் சட்டமசோதாவின் போதும், தொடர்ந்து ரம்மி தடைச் சட்ட முன்வடிவு மசோதா அனுப்பப்பட்ட போதும், அதற்கான விளக்கத்தை ஆளுநர் கேட்டதற்கு அரசு அளித்த விளக்கத்தின் போதும் என்று மசோதாவைத் திருப்பித்திருப்பி அனுப்பிய ஆளுநருக்கு அப்போதெல்லாம், இந்த ஞானோதயம் ஏன் வரவில்லை?

ஒன்றிய அரசின் சட்ட அமைச்சரே இது போன்ற விவகாரங்களில் அந்தந்த மாநில அரசுகளே சட்டம் இயற்றலாம் என்று சொல்லி இருக்கிறாரே!

இப்பொழுது மீண்டும் ரம்மி தடைச் சட்ட மசோதா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்மொழியப்பட்டு பேரவையில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

என்ன செய்யப் போகிறார் ஆளுநர் ?

ரம்மி ஆன்லைன் சூதாட்டத்தால் பணத்தை இழந்து, வாழ்க்கையை இழந்து 40 பேர்களுக்கு மேலும் தற்கொலைகள் தொடர்வது ஆளுநருக்குத் தெரியாமலா இருக்கிறது.

உலகமே வியக்கும் திராவிடம், திராவிட மாடல் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக மக்களால் அமைந்த அரசை முடக்குவது ஏற்புடையதன்று.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## ராகுல் காந்தி பதவி பறிப்பு – சர்வாதிகாரம் !



.2019 ஆம் ஆண்டு கர்நாடகத்தில், கோலாரில் லலித் மோடி, நீரவ் மோடி குறித்துப் பேசியதாக, குஜராத் நீதிமன்றத்தில் மூன்றாவது நபர் ஒருவர் தொடுத்த வழக்கில் இரண்டு ஆண்டுகள் ராகுல் காந்திக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தண்டனையை மேல் முறையீடு செய்ய ஒரு மாதம் தண்டனையை நிறுத்தி வைப்பதாக நீதிமன்றம் அறிவித்த போதும், தண்டனையைக் காரணம் காட்டி ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்துள்ளது மோடி அரசு.

இண்டண்பர்க் அறிக்கையின் அடிப்படையில், நாடாளுமன்றத்தில் அதானி மீதான ராகுல் காந்தி எழுப்பிய கேள்விகளை எதிர்கொள்ள முடியாத மோடி அரசு, ராகுலின் பதவியைப் பறித்தது சர்வாதிகாரத்தின் உச்சமாகும். இது வன்மையான கண்டனத்திற்கு உரியதாகும்.

# FEDERALISM IN PERIL (ஆபத்தில் கூட்டாட்சி)

நூல் அறிமுகம்


## வெற்றிச்செல்வன்

தந்தை பெரியார் அவர்கள், அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட காலம் முதல் அவரது இறுதி மூச்சு வரை, அச்சட்டத்தை எதிர்த்து வந்தார்.

ஜாதியைப் பாதுகாக்கும் பிரிவுகளைக் கொண்ட அரசியலமைப்புச் சட்ட நகலை எரிக்கும் போராட்டத்தை 1957ஆம் ஆண்டு நடத்தினார்.

அப்போராட்டத்தில் 3000-க்கும் அதிகமானோர் சிறையிலடைக்கப்பட்டனர்.

அவ்வாறு சிறையில் 18 மாதங்களைக் கழித்த பெரியாரியலாளர் வெ. ஆனைமுத்து அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு, 1988ஆம் ஆண்டு வெளிவந்த நூல், 'Federalism in Peril' (ஆபத்தில் கூட்டாட்சி) என்னும் இந்த நூலாகும்.




அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் (Pre-amble) குறிப்பிட்டுள்ளது போல இந்தியா என்பது உண்மையிலேயே ஜனநாயகக் குடியரசா என்ற கேள்வியை முன்வைக்கிறது இந்நூல்.

அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிய அவை என்பது பெரும்பான்மையாக நிலக்கிழார்கள் மற்றும் வணிகர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட அவையாக இருந்தது. 1946 தேர்தலின்போது, இந்தியாவில் மாகாணங்களில் நடைபெறும் தேர்தல்களில் வாக்களிக்க உரிமை பெற்றவர்கள் வெறும் 14% பேர் மட்டுமே.

அந்த 14% - இல் இருந்து, நான்கில் ஒரு பங்கு, அதாவது இந்திய மக்கள் தொகையில் வெறும் 4% மட்டுமே மத்திய நாடாளுமன்ற அவைக்கு வாக்களிக்க உரிமை பெற்றவர்கள் ஆவர்.

இந்த அவை எப்படி இந்தியாவின் அனைத்து சமூகங்கள் மற்றும் வர்க்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதியாக இருக்க முடியும் ?

பலதரப்பட்ட மக்களைக் கொண்ட இந்தியவிற்கான ஒரே அரசியலமைப்புச் சட்டத்தினை இந்த அவை எவ்வாறு இயற்ற முடியும் என்பது முக்கியமான விவாதம். இந்தியாவின் பன்மைத்துவத்தைப் பாதிக்கும் காரணிகள் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறது இந்நூல்.

குறிப்பாக, இந்தி எவ்வாறு அரசியலமைப்பின் மூலம் திணிக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்தி பேசாத மக்கள் எவ்வாறு இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கப்பட்டுள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது இந்நூல்.

கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான பல உறுப்புகள் அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. நெருக்கடிநிலைப் பிரகடனம், மையப்படுத்தப்பட்ட அகில இந்தியப் பணிகள் ஆகியவை எவ்வாறு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக இயங்குகின்றன என்று பல செய்திகளை விவாதிக்கும் இந்நூல் இவற்றுக்கு எல்லாம் மாற்று என்ன என்ற தீர்வையும் முன்வைக்கிறது.

ஒரு மாற்று அரசியலமைப்புச் சட்டத்தை (People's Constitution) ஏற்படுத்துவதே அத்தீர்வு.

தன்னாட்சி பெற்ற மாநிலங்கள், பொதுவுடைமைப் படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் பங்கீடு, மதச்சார்பற்ற கல்வி, பெண் மற்றும் ஆண் இருபாலருக்கான சம உரிமைகள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்ட அரசியலமைப்பை இந்நூலில் ஆசிரியர் முன்வைக்கிறார்.

பா.ஜ.க. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து மாநில அரசின் அதிகாரங்களைக் குறைக்கும் போக்கினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. "எந்த ஒன்றையும் திணிப்பது எதிர்ப்பை உண்டாக்கும்; பாகுபாடு வேற்றுமையைப் புகுத்தும்" என்ற உண்மையை உணர்த்தும் இந்நூலிலுள்ள செய்திகள் விவாதிக்கப்படுவதும், இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதும் காலத்தின் தேவை.

●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian